DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.1 /2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-7 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.பழனீஸ்வரி |
| Father's Name (or) | | |
| Husband Name | : | க/பெ.பழனி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A ccused absent. u/s 355 BNSS petition filed and allowed..)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 20.11.2025

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சேமங்வயலில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலைசெய்து வருகிறேன்.இவ்வழக்கின் அ.சா.1 சண்முகம் எனது அப்பா ஆவார். எதிரிகளை எனக்கு தெரியாது. நானும் எனது அப்பாவும் வங்கிக்கு நகை அடமானம் வைப்பதற்காக தேதி மாதம் நினைவில் இல்லை. 2018 வருடம் வங்கிக்கு சென்றிருந்தோம். செயின் ஒன்றும், வளையல் ஒன்றும்பணம் 3,00,000 த்தை பையில் வைத்து வெளியே வந்தோம்.எனது அப்பா வங்கிக்கு முன்னால்நின்று கொண்டு இருக்கும்போது நான்

கடைக்கு சென்றேன். அப்போது யாரோ இரண்டு பேர் எனது அப்பாவிடம் இருந்து பையை பறித்து கொண்டுபோய் ஓடிவிட்டதாக எனத அப்பா என்னிடம் சொன்னார்.போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எத்தனை மணிக்கு எனது அப்பாவை விட்டு நான் கடைக்கு விலகி சென்றேன் என்றால் சம்பவத்தன்று காலை சுமார் 11 மணி இருக்கும். திருட்டு சம்பவம் நடைபெறும்போது நான் சம்பவயிடத்தில் இருந்து எவ்வளவு தூரம் தள்ளிஇருந்தேன் என்றால் இரண்டுதெரு தள்ளிசுமார் 500 மீட்டர் தள்ளி இருந்திருப்பேன். எதிரிகள் எனது அப்பாவிடமிருந்து பையை எத்தனை மணிக்கு பறித்துகொண்டு சென்றதாக நான்கேள்விபட்டேன் என்றால் நேரம் சரியாக தெரியாது. சம்பவம் நடைபெற்றபோது நான் எனது மாமியாரை பார்ப்பதற்காக வெள்ளையாபுரம் சென்றதாக சொல்வது உண்மையா என்றால் வெள்ளையாபுரம் செல்வதற்காக கிளம்பினேன் அதற்குள் பை திருடுபோனதாக போன் வந்தது உடனே சம்பவயிடத்திற்கு திரும்ப வந்துவிட்டேன்.

2. நான் சம்பவயிடத்திற்கு திரும்ப வரும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் மதியம் சுமார் 12–12.30 மணி இருக்கும். மேற்படி சம்பவயிடத்திலிருந்து எங்குசென்றேன் என்றால் வீட்டிற்கு சென்றேன். எனது தந்தை சொன்னதன்பேரில் சாட்சியம்அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எதிரிகளை நான் இதுவரை பார்க்கவில்லை என்றால் சரிதான்.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.